A· உனக்கு நான் பல்லக்கு நான் அலங்காரஞ்செய்து,

B· ஆ.

A· உனக்கு பொட்டுவைத்து,

B· ஆ.

A· உன்னையெ மெனவரையா (ஊர்வலமாக)க் கொண்டேடு வந்து விடறெ

B· ஆ.

A· அப்பர நீ வீரமில்ல போகலா."

B· ஆ.

A· "இதுதானுங்காத்தா!

B· ஆ.

A· சாணிசெமக்கற கழுதைக்கி

B· ஆ.

A· சந்தனப்பொட்டு ஒரு கேடா?

B· ஜெரி.

A· நானினி பல்லாக்கிலெ வந்தான்னு உன் பிறந்தவனுக்கு சமாசாரங்கேட்டா பொடனியெ ஒரு மயிரிருக்க வெட்டிப் போடுவானென்னையெ.

B· ஆ.

A· ஏம்மினி எனக்கு பல்லாக்குவேற வேணு என்னுடைய பொழப்புக்கு?

B· ஆ.

A· ஜாதிகெட்ட பறையெ என்னையெ மதிக்காமெப் போனுங்கோ எனக்கு பல்லாக்கு நீ போடறயா அம்மினி?"

B· ஆ.

A. "வாண்டாம் பொண்ணுத்தான்னு கோபத்தாத்தி"

B. ஆ.

A. "அம்மா!

பாட்டு:-

/ போகவிடை நீதாரம்மா

போகவிடை நீதாரம்மா

நா போய் வருவேன் கண்மணியே

B. போகவிடை நீதாரம்மா

with A. போகவிடை நீதாரம்மா

B. பொன்னரளி கொம்பைதேடி

A. நா பன்னியெக் கொன்னுமல்ல

நான் பன்றியெக் கொன்னுமல்ல

இனி பழிகாரனே கூட்டிவார்ரே

B. நான் பன்றியைக் கொன்னுமல்ல

ஐயோ பன்றியைக் கொன்னுமல்லோ

A. கொன்னுமல்லோ

B. நான் பழிதீனை முடிந்து வார்ரே

A. அம்மா நல்வாக்கு நல்வாக்கு நீ கொடம்மா

நல்வாக்கு நீ கொடம்மா

நான்போயி வருவேனம்மா

B. அது நல்வாக்கு நீ கொடம்மா

A. நீ கொடம்மா

B. ஐயோ நல்வாக்கு நீ கொடம்மா

About 1 min. and 2 sec.

A· நீ கொடம்மா

B· நான் போயி வருவேனம்மா!

A· பத்தினியெடத்திலெ நல்ல உத்தரவு வாங்கி

B· ஆ.

A· "அடே சாம்புகா!

B· ஆ.

A· எதாவது நீ பொன்னுத்தாகிட்டெப் பேசிறதே.

B· ஆ.

A· பிச்சுப்போடுவா உன்னையெ.

B· செரி.

A· அசிங்காமெக் கொண்டுபோயி

B· ஆ.

A· வீரமலிக்கிக் கொண்டுபோய் அண்ணரிடம்

B· ஆ.

A· சேர்த்துமடா சாம்புகனே...

B· சாம்புகனே...

A· பொன்னுத்தா!

B· ஆ.

A· எதாவது கோபம் வந்து சாம்புகன்மேலெ சீறிறதே அம்மினி

B· ஆ.

A· "வாண்டாமாத்தான்னு கோவத்தாத்தி

B· ஆ.

A· நல்வாக்கு அனுப்பியும் வைத்திட்டாளே...

B· வைத்திட்டாளே...

பாட்டு:-

A. சாம்புகே சாம்புகனும்
முன்நடக்க முன்நடக்கோ

B. அட மாயவனே முன்நடக்க

A. கிளி பொன்னுத்தா பொன்னுத்தா
பின்நடந்தா பின்நடந்தா

B. அடா ஆண்டவனார் ஆண்டவனார்
முன் நடக்க முன்நடக்க

A. ஏ முன்நடக்க முன்நடக்க

B. அடியனுமே அடியனுமே
பின்தொடர்ந்து வருகிறனே

A. அங்கே பொன்னிவளை பொன்னிவளை
நாடுவிட்டு நாடுவிட்டு

B. அட மாயவனே நாடுவிட்டு

A. கிளி அங்கே பொன்னுச்சியெ சாம்புகெ
கூட்டிவர்றான் கூட்டிவர்றான்

B. அடா பொன்னிவளை பொன்னிவளை
நாடுவிட்டு நாடுவிட்டு

A. ஏ வாசுதேவா வரணதேவா

B. அங்கே பொன்னுச்சியெ பொன்னுச்சியை
கூட்டிவாறான் கூட்டிவாறான்

A. அங்கே நாகமலே நாகமலே
தோகமலே தோகமலே

About 2 min. and 34 sec.

B. அடவென்ன செய்வே மாயவனே

A. இனி நடவெறெக்கும் வீரமனே

வருகிறனே சாம்புகனு

B. அடா நாகமவே நாகமவே

தோகமவே தோகமவே

A. ஏ தோகமனே தோகமவே

B. அங்கே நடவெறெக்கி வீரமனே

வருகிறனே வருகிறனே

A. வீரமனுக்கி வந்து

B. ஆ.

A. சாமி கூடாரம் வந்து சேர்ந்தானே சாம்புகனு...

B. சாம்புகனே...

A. பார்க்கலாம் பறையன் முன்னால போகிட்டன்னு

B. ஆ.

A. பொண்ணுச்சி ரண்டு பேர்லாமுக்கி அந்தப்பரத்திலே

B. ஆ.

A. ஒரு குன்னுங்கல்லின் பேரிலே

B. ஆ.

A. ஏறி உக்காந்து இருக்கிறனே...

B. இருக்கிறனே...

A. "ஏன்பா பறையா! எங்கடா பொண்ணுச்சி?"

B. ஆ.

A· அப்பத்தே திரும்பிப் பாத்தா(ன்)

B· ஆ.

A· "சாமி பாருங்க கல்லும்பெருமை உக்காந்திருக்குது பாருங்க."

B· ஆ.

A· "சண்டாளி! எனக்கு சாபங்கொடுத்து சாகுடென்னு கல்லும்பெருளெ உக்காந்திருக்கறயான்னு"

B· ஆ.

பாட்டு:-

About 34 see

A· கத்தி கத்தி சுழட்டுறது

B· சுழட்டுறது

A· கத்தி அடாடா சுழட்டுறது

B· சுழட்டுறது

A· கார்மின்னல் எஞ்சாமி மின்னுதுபார்

B· அடாடா கத்திநல்ல அண்ணு சுழட்டுறது

A· போடராசாமி

B· சுழட்டுறது

A· ஆடசாமி

B· கார்மின்னல் அண்ணுங்கே போலேயல்ல

A· ஒ ஈட்டி ஈட்டி சுழட்டுறது

B· சுழட்டுறது

A· தெருமின்னல் எஞ்சாமி மின்னுதுபார்

B· ஈட்டி நல்ல அண்ணு சுழட்டுறது

A· சுழட்டிறது

B· சுழட்டிறது

A· ஆட்ட சாமி

B· இடி மின்னல் அங்கேதாம் போலேயல்லோ

A· சாமி கோபம் பொறுக்காமெ கத்தியெ வீசற போது.

B· ஆ.

A· சாமிகத்தி வர்றதை பொன்னுத்தா கண்டு

B· ஆ.

A· மேலெ ஏ·ரடி பனையுயரம்

B· ஆ.

A· மேலெ பறந்திட்டாளே ...

B· பறந்திட்டாளே ...

A· சாமி கத்தி வேகமாப் போயி

B· ஆ.

A· பொன்னுச்சி கிடைக்காமல்

B· ஆ ஆ.

A· கல்பி இ தெண்டா வெட்டி

B· ஆ.

A· சாமி கைவந்து சேர்ந்துதங்கே ...

B· சேர்ந்துதன்னு ...

A· தெய்வ சபையிலெ பிறந்தவளல்லவா!

B· ஆ.

A· அப்பிடியெ பறந்து நெரெ கேரலெ

B· ஆ.

A· வெள்ளிக்கூடாரத்திலெ சாமி மின்னுலெ யோயி டக்குன்னு கீழெறங்குனெ.

B · ஆ.

A · "சண்டாளி!

B · ஆ.

A · எப்படி கத்திக்கித் தப்பிச்சு வந்தாய் நீ?

Cassette B · ஆ.

20A A · சதிகாரப்பறையன் அந்த கோடி படைகளையும்

B · ஆ. //

A · கொன்னு போட்டான் பொன்னுச்சி ---

B · பொன்னுச்சி ---

A · "ராஜாவே! தாங்கதெ நெனைச்சீங்களா ? ஜாதிகெட்ட பறையங்தெ நெனச்சானெ?

B · ஆ. //

A · நா வந்திருந்தா ஒரு எலும்பு சிதறுமா ராஜாவே ---

B · ராஜாவே ---

A · "பொன்னுச்சி!

B · ஆ.

A · நாம இனி ஊர் போயிச் சேரப்பலையில்லெ.

B · ஆ.

A · அந்த கோடி இடிபடை களையும்

B · ஆ.

A · முண்டையாக்கிப்போட்டு நா உயிரைக்கொண்டு போனா,

B · ஆ.

A · எங்களுடைய புருஷனெங்கெ சாமீன்னு கேட்டுட்டா

B · ஆ.

A · இந்த உயிரைவெச்சு நாம எதுக்குப் போறது?

B · ஆ. //

A · இங்கெயே மடிச்சுப் போடோணுமின்னு

B · ஆ.

A · சொல்லுகிறேர் ராஜாவு ---

B · ராஜாவு ---

A. ராஜாவே நாம என்னதாஞ் செய்யறது --

B. செய்யறது...

A. பறையனும் சதி செய்துவிட்டான் ராஜாவென்னுட்டு

B. ஆ.

A. என்னமோ இருந்தாலுமிருக்கட்டே

B. ஆ.

A. ராஜாவே!

B. ஆ.

A. இப்பந்தப் பன்னி எங்கிருக்கிதுங்க?"

B. செரி.

A. "சாம்புகனைக் கேள்."

"அடே சாம்புகா!" "சாமி!"

B. ஆ.

A. "ஏன்டா, அந்தப் பன்னியெந்தெடத்திலிருக்கிதெடா

வீரமலெ?"

B. ஆ.

A. "சாமி!

B. ஆ.

A. நடுமலெலெ

B. செரி

A. ஒரு தோன்றுகல்

B. ஆ.

A. அடுக்கடுக்கா ஒரு ரண்டாளுயரமிருக்கிது.

B. ஆ.

A. அந்தக் கல்லும்பேரிலெ ஒரு மின்னமரம் பிரமாண்டமா

திழுஞ்சு

B. ஆ.

A. இருக்கேங்க.

B. செரி.

A. அதுக்கு கீழ்புரத்திலெ

B. ஆ.

A. ஒரு அரைப்பர்லாங்கு அங்கிலே,

B. ஆ.

A. ஒரு ஈச்சம் பொதையிலெ

B. ஆ.

A. ரண்டாளைக் கிழிச்சுதொண்டு அந்தப் பன்றி

B. ஆ.

A. படுத்து இருக்கேங்க ராஜாவே..."

B. ராஜாவே...

A. "சாமி!

B. ஆ.

A. அது எங்கெட கிடைஞ்சாலும்

B. ஆ.

A. நான் போயி புடிச்சு அதைக் கொண்டுட்டு வந்தர்றனுங்க.

B. ஆ.

A. நான் மேற்கே கொண்டுக்கிட்டு வந்து

B. ஆ.

A. வர்றதுக்குள்ளாக ஆளுங்க அரைப் பெலன் செய்து போடுவனுங்க.

B. செரி.

A. ஆமாங்க

B. ஆ.

A. வடக்கெ திரும்பும் போது

B. ஆ.

A. பன்றி இத்தும் நீங்க பாரவேலைக் கொண்டுபோயி சேன்றுபேசும்

B. ஆ.

A. தயாரா நின்னு,

B. ஆ.

A. கட்டு கட்டு கட்டுன்னு வகுடுங்க.

B. ஆ.

A. வந்தொடனே

B. ஆ.

A. மெற்கெ வந்து வடக்கெயின்னுத் திரும்புனு,

B. ஆ.

A. தெய்வசபையெ நினைத்து

B. ஆ.

A. பாரவெட்டி உனனிருங்க ராஜாவே"...

B. ராஜாவே...

A. "அப்படியெ நல்லதென்"று அன்புடனெ சொன்னாரெ...

B. சொன்னாரெ...

A. "பொன்னுத்தா!

B. ஆ.

A. நீ போயி எங்கும் விசனங்கொடாமல்,

B. ஆ.

A. இந்தச் சரியிலெ நீ மெக்கெ கொண்டுக்கிட்டு வா

நான் தயாரா இருக்கற"மின்னு

B: ஆ.

A. சாமி ரண்டு பேரும் சாம்புகெ மூணு பேரும்

B. ஆ.

A. அவர்களுடை கத்தியெடுத்து,

B. ஆ.

A. சின்னண்ணசாமி பன்னிரெத்தும் பாரவெட்டியெடுத்துப் போய்

பாறையில் நின்னு

B. ஆ.

A. பொன்னுத்தா எந்தைடத்திலிருந்தாலும்

B. செரி.

A. இதெ சரிவிலெ நீ கொண்டேட்டு வரோணு" அப்பிடீன்னுட்-டார்.

B. ஆ.

A. "நல்லதுங்க ராஜாவே---"

B. ராஜாவே---

A. ராஜனிடத்திலெ உத்திரவு பெற்று

B. ஆ.

A. பொன்னுச்சி புறப்பகுது அந்நேரோ

B. அந்நேரம்

பாட்டு:-

A. பண்ணியெ பண்ணியை
காணமென்று காணமென்று

B. ஐயோ காணமென்று காணமென்று

A. அங்கெ போகுதுபார் போகுதுபார்
பொன்னுச்சி பொன்னுச்சி

B. அங்கெ பண்ணியத்தெ பண்ணியத்தா(ன்)
காணமென்று காணமென்று

A. ஏ வாசுதேவா வரணதேவா

B. அங்கெ போகுதுபார் போகுதுபார்
பொன்னுச்சி பொன்னுச்சி

A. அங்கெ கொம்பனெ கொம்பன
தேடியங்கெ தேடியங்கெ

B. அட வாசுதேவா வருணதேவா

A. இனி இனி வருகிறளே அன்னக்கொடி

பொன்னுச்சி பொன்னுச்சி

B. அடா கொம்பனைத்தான் அங்கே

காணமென்று காணமென்று

A. ஏ வாசுதேவா வரணதேவா

B. அங்கே வருதெய்யா வருதெய்யா

நாயுமங்கே நாயுமங்கே

A. அங்கே வீரமல் வீரமல்

காட்டுலேதா காட்டுலேதா

B. அட என்பெருமாள் காட்டுலேதா(ன்)

A. அங்கே வெண்குழியி வெண்குழியும்

சோங்கிலேதா தேதையார்

B. அடா வீரமல் வீரமல்

காட்டுலேதா காட்டுலேதா

A. ஏ வாசுதேவா வரணதேவா

B. அந்த வெண்குழியி வெண்குழியும்

சோங்கிலேதா சோங்கிலேதா

*About 2 min. and 31 sec.*

A. பன்னியெக்காணமென்று பதறுகிறே பொன்னுத்தா...

B. பொன்னுத்தா...

A. நமெயிலெ வாரபோது வீரமெயிலே

B. ஆ.

A. பறையன் சொன்ன அடையாளம்

B. ஆ.

A. மூன்று கல் அடுக்கடுக்கா இருக்கிறது.

B. ஆ.

A. ஒரு பின்னமரம் மேலெ.

B. ஆ.

A. 'ஏகோ! பறையன் இதுதான் ஒரு அடையாளஞ் சொல்லிருக்கறன்.

B. ஆ.

A. "நமெயிலெ

B. ஆ.

A. மூன்று கல் அடுக்கடுக்கா இருக்குதெங்க.

B. ஆ.

A. அதுமேலெ ஒரு பின்னமரம்.

B. செரி.

A. அதுக்கு கீழ்புரத்திலே

B. ஆ.

A. ஒரு ஏ. ச்சம் பொதைவ, ஒரு அரைப்பர்லாங்குக்கு தெழவரத்திலெ பதித்திருக்குதின்னு சொன்னான்.

B. ஆ.

A. அப்ப இந்தெடமாத்தே இருக்குமோ?

B. ஆ.

A· பார்க்கலாமென்று

B· ஆ.

A· பொண்ணுச்சிபோயி

B· ஆ.

A· மூன்று கல்லுக்கு மேலேறி

B· ஆ.

A· அந்தப் பிண்ணமரத்து நெழல்லெ

B· ஆ.

A· கெழக்குமின்னு கொரக்குன்னு குத்தவெச்சு உக்காந்து இருக்கிறாங்கை...

B· இருக்கிறாங்கை...

A· ஒருநாழிகை, ரண்டுநாழிகை மூன்று நாழிகையாயிட்டது.

B· ஆ.

A· கப்புன்னிருக்குதே.

B· செரி.

A· பன்றி

B· ஆ.

A· இன்னைக்கிம் காராளனைக் காணு!

B· ஆ.

A· சண்டாளங்கிட்டெப்போயி

B· ஆ.

A· இன்னைக்கி பொண்ணிவளாநாலெசென்று

B· ஆ.

A· அவனுடைய கோட்டையிடிச்சு கொத்தளமெல்லாஞ்சாச்சு மாடியிடிச்சு மண்டபமெல்லாஞ்சாச்சு

B· ஆ.

A· இரண்டுபேரையும் இடலைப் புங்கிமாலை போட்டு

B· ஆ.

A· அந்த அன்னைக்கொடி பருவெதியாளைக் கொண்டாந்து
வீரதங்கா பத்தினிக்கி

B· ஆ.

A· மஞ்சளறைக்கவும் தொட்டளாட்டவும் போட வேண்டும்

B· ஆ.

A· எதாவு வந்திருக்கறதோ என்னமோ தெரியவில்லையென்று

B· ஆ.

A· பொதையுட்டிக் கிளம்பி

B· ஆ.

A· மேலெவந்து மேற்கேமின்னுநின்று பார்க்கும் போது,

B· ஆ.

A· இரண்டு காதும் மூளிபோட

B· ஆ.

A· கல்லும்பேறில் பின்னைமரத்தடியில்

B· ஆ.

A· பொன்னுச்சி இருக்கிறதங்கை...

B· இருக்கிறதங்கை..

A· "ஹவ் ஹவ் ஹவ் ஹஜு ஹஜு ஹா! அடே!

B· ஆ.

A· டே, நீயார்?"

B· ஆ.

A· பொன்னுச்சி அதுக்கேபேசலை.

B· ஆ.

A· "அடே, சாமார்த்திமே!

B· ஆ.

A· இவ்வளவு அழகோட கிழக்குமின்னு உக்காந்திருக்கிறயே சண்டாளா!

B· ஆ·

A· யாரடா, அந்தக் காராளனுக்கு தூதனு நீய்யி?

B· ஆ·

A· அதுக்கும் பேசுலெ·

B· ஆ·

A· "டேய்! நான் யாருன்னு தெரியுமா?

B· ஆ·

A· கொம்பராஜா!

B· ஆ·

A· ஆமா· பொன்னிவளநாட்டை அவ்வளவையும் நான் அதஞ்செய்தவன் நான்.

B· ஆ·

A· ஜாக்கிரதையா இரு!

B· ஆ·

A· குடலெப் புடுங்கிப் போடுவெ!

B· ஆ·

A· அடே நீளி!

B· ஆ·

A· நீ யெங்கூர்?

B· ஆ·

A· அதுக்கும் பேசாமிருக்கிறது பார்க்கலா!

B· ஆ·

A· என்னதான் சொல்லுமொன்னு

B· ஆ.

A· "அடே, மூளி!

B· ஆ.

A· இரண்டு காதும் மூளியோட உனக்கு இவ்வளவு கொர்வமிருக்-கிதே,

B· ஆ. ஆ.

A· இரண்டு காதுமிருந்தா நீ உலகத்திலெ யாரையுமெ வெச்சிருப்பயா?"

B· ஆ.

A· "அடே, கொம்பா!

B· ஆ.

A· சாஸ்தி பேசுனுயா (பேசுனயா)

B· ஆ.

A· உன்னுடைய திரேகம் கெட்டுப்போகும்.

B· ஆ.

A· பார்க்கறதுக்கு நான் இரண்டு காது மூளியோட இருக்கறெ

B· ஆ.

A· பேசாமிருக்கறன்னு நெனச்சுக்கிட்டயா!

B· ஆ.

A· கொஞ்ச வேடிக்கையைப் பாரு.

B· ஆ.

A· ஜாக்கிரதையா இரு "அடே, சாமார்த்தியமே!

B· ஆ.

A· அவ் ஹவ் ஹவ்ரா பார்த்தயா!

B· ஆ.

A. இரண்டு காது பூனியோட இருந்துக்கிட்டு, அது எவ்வளவு சாமார்த்தியம் பேசுது!

B. ஆ.

A. யாரடா நிய்யி?"

B. ஆ.

A. "அடே, கொம்பா! நா யாரா இருந்தா உனக்கென்ன?"

B. ஆ.

A. "அப்ப, அந்தக் காராளனுடைய நிய்யி

B. ஆ.

A. மொதல் மந்திரி! அந்த வாசல்லெ இருக்கக் கூடியவனு?"

B. ஆ.

A. "அடெ இருக்கறெ, இல்லெ. உன்னையதாரா கேட்டா?"

B. ஆ.

A. அப்படீன்னுது.

B. ஆ.

A. "என்னடா நிய்யி இரண்டுகாது பூனியோட இருந்துக்கிட்டு எங்கிட்டெ இவ்வளவு சாமார்த்தியம் பேசறயே!

B. ஆ.

A. நான் இந்த இரண்டுகாதோட, ஒரு காதொன்னு எனக்கு மொறத்தகலமிருக்குது."

B. ஆ.

A. அருபதடி உயரம்,

B. ஆ.

A. எருபதடி நீளமுள்ள கொம்பன்.

B. ஆ.

A. சாஸ்தரமுள்ள கொம்பன், வேதமுள்ள கொம்பன், நட்சேத்திரமுள்ள கொம்பன்.

B. ஆ.

A. வெப்பெழிக் கொம்பன் வெந்த மூஞ்சிப் பன்றியது ---

B. பன்றியது ...

A. பூவால் பூஞ்சுட்டி பொன்னலங்காரோ ---

B. அலங்காரம் ...

A. நாவிலே நட்சத்திரம் தொப்புழில் துளசிமாலை ..

B. துளசி மால ...

A. அறுபதடி நீளமுள்ள கொம்பன் தண்டவாளெ முழுங்கி மோவுயா நின்னு

B. ஆ.

A. "அடே, மூளி!

B. ஆ.

A. நீயெந்தா? அப்படின்னும்".

B. ஆ.

A. "அடே கொம்பா!

B. ஆ.

A. நானு மூளியா இருக்கறே?

B. ஆ.

A. கொஞ்சம் பாருன்னு"

B. ஆ.